# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.17/ந/2026, நாள் 03.09.2026**

மா. பாபுராஜ்
முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி, முசிறி, திருச்சிராப்பள்ளி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி, வடகள்ளர் தெரு, எண். 47 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மா. பாபுராஜ் என்பவரது 09.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.01.2026 அன்று பெறப்பட்டு 17/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி, வடகள்ளர் தெரு, எண். 47 முகவரியில் வசிக்கும் திரு. மா. பாபுராஜ் என்பவரின் 09.01.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"முசிறி புதிய பேருந்து நிலையம் மிக மிக மோசமான சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பாதுகாக்கப்படவில்லை. நோய் தொற்று அதிகமாக பரவும் நிலையில் பேரூந்து நிலையம் உள்ளது.

2. அப்பேருந்து நிலையத்தில் உள்ள மேற்கூரை இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. அந்த பேருந்து நிலைய மேற்கூரையை சரி செய்து பயணிகளை காக்க மேற்கூரைக்கு புதிதாக தட்டு ஒடு மாற்றுவதற்கு, டெண்டர் விடப்பட்டு புதிதாக தட்டு ஒடு மாற்றும் பணி நடந்து கொண்டு இருக்கிறது. இந்த பணியில் நகராட்சி ஆணையர் சண்முகம் புதியதாக தட்டு ஓடுகளை மாற்றாமல், தன்னுடைய சுய இலாபத்திற்காக, ஏற்கெனவே அதிலிருந்து களையப்பட்ட பழைய தட்டு ஓடுகளுக்கு வர்ணம் தீட்டி, புதிது போல் காட்டி உள்ளது வருந்ததக்க ஒன்றாகும். இதற்கு டெண்டர் தொகையாக ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது இலட்சம்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

3. மேலும், புதிய பேருந்து நிலையத்திற்கு வரும் அரசு, தனியார், நகர, புறநகர மற்றும் இதர வாகனங்கள் (வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள்) அனைத்திற்கும் உரிய கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்யப்படுகிறது. பேருந்து நிலையத்திற்கு வெளியே செல்லக்கூடிய வாகனத்திற்கும் மிரட்டி பண வசூல் செய்யப்படுகிறது. இந்த கட்டணங்கள் முழுமையாக அரசிற்கு (நகராட்சி நிர்வாகத்திற்கு) போய் சேருவதில்லை. மாறாக, நகராட்சி ஆணையர் சண்முகத்திற்கு நகராட்சி ஊழியர் முத்துச்செல்வம் மூலம் அதிக தொகை வசூல் செய்து தரப்படுகிறது.

4. உழவர் சந்தை: முசிறி, உழவர் சந்தையை ஒட்டி வடபுறம் கீழமேலாக செல்லக்கூடிய சாக்கடை உடைந்து சாக்கடை தண்ணீர் மழைக் காலங்களில் உழவர் சந்தைக்குள் சென்று, உழவர் சந்தைக்கு வரும் பயனாளிகளுக்கு, நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது. எனவே, உடனடியாக உழவர் சந்தை சீர்கேடுகளை சரிசெய்து, பொதுமக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்க கோரி நான் எதிர்மனுதாரர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் 27.10.2025ம் தேதியிட்ட புகார் மனுவினை அனுப்பியிருந்தேன்.

5. அந்தப் புகாரில், 22வது வார்டு, புதன் கிழமை வாரச்சந்தை – அருகில் உள்ள பொது கழிப்பறையானது, பல காலமாக சுத்தம் செய்யப்படாமலும், சீர் செய்யப்படாமலும் கவனிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டதால், அங்கு வாழும் பொதுமக்களும், வாரச்சந்தைக்கு வரும் அனைத்து சுற்றுப்புற ஊர்பொதுமக்களும், பெரிதும் பாதிக்கப்படுகிறாகள். அதனையும் உடன் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க கோரியிருந்தேன்.

6. மேலும், அந்த புகாரில் முசிறி வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன பகுதி ஆய்வாளர் அலுவலகத்திற்குள் அந்த பகுதி கழிவு நீர் வாய்க்கால் (ட்ரைனேஜ்) முறையாக அமைக்கப்படாமல் சுய இலாபத்திற்கு அமைக்கப்பட்டு, அதில் வரும் ஒட்டுமொத்த கழிவு நீரும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தையும், வட்டார போக்குவரத்திற்கு வரும் பொதுமக்களையும், பாதிக்கும் நிலையில் உள்ளது. இது சம்பந்தமாக போக்குவரத்து துறை அலுவலர்களின் கோரிக்கையை இந்த ஆணையர் உதாசீனப்படுத்திவிட்டார் என்பதும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

7. முசிறி அனைத்து வார்டுகளிலும், சரியான சாலை வசதிகளோ, முறையான கழிப்பிட வசதிகளோ, மழைநீர் தேங்காமல் இருக்க, மழைநீர் வடிகால் வாய்க்கால்களோ அமைக்கப்படவில்லை. மாறாக, ஆங்காங்கே மழைநீர் தேங்கி, பொதுமக்களுக்கு நோய் தொற்று காலரா, வாந்தி, மயக்கம், பேதி, காய்ச்சல் மற்றும் ஏனைய உயிர்கொல்லி நோய்களை பரப்பும், கொசுக்கள் அதிகமாக உள்ளது. இந்த கொசுக்களை அழிப்பதற்கு, நகராட்சி ஆணையர் சண்முகத்தின் பதவி காலத்தில் ஒருநாள் கூட கொசு மருந்து அடிக்கவில்லை.

8. புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பறை–10 மற்றும் குளியலறை–10, சிறுநீர் கழிப்பிடங்கள்–3 அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டுவந்தது. தற்போது, இந்த கழிப்பறைகள், குளியலறைகள் பழுதாகி இடிந்து விழும் நிலையில் உள்ளது. அதனை உடனடியாக செப்பனிட முடியாது என்பதாலும், அவ்வாறு செப்பனிடும் காலத்தில் பொதுமக்களுக்கு வேறு குளியலறை, கழிப்பறை ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதாலும், குளியலறை, கழிப்பிடங்களை வேறு இடத்திற்கு மாற்றி புதிதாக கட்டித்தர கோரிக்கை வைத்தேன். அதற்கு 4+4 கழிப்பறைகளும், 1+1 குளியலறையும் கட்டப்பட்டு, அதையும் மத்திய அரசினால் சந்தப்பாளையம் வார்டு 1-க்கு கழிப்பிட வசதி செய்து தர வழங்கப்பட்ட நிதியை அங்கு செலவிடாமல், இங்கு செலவிட்டுள்ளார்கள். அது போதுமானதாக இல்லாததாலும், அதில் சிறுநீர் கழிக்க தனிப்பட்டவசதி இல்லாததாலும், அதற்கு மின் இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்பு இதுவரை செய்யப்படாததாலும், அது நாளது தேதிவரை திறக்கப்படாமல் உள்ளது.

9. எனவே, நான் இது சம்பந்தமாக எனது 27.10.2025ம் தேதியிட்ட புகாரை திருச்சி மாவட்ட Consumer Counsel கிருபானந்தம் மூலம் தங்களுக்கும், உயரதிகாரிகளுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் தனிப்பிரிவிற்கும் சார்வு செய்தேன். எனது புகார் அன்றே தங்களிடம் நேரிலும் சமர்ப்பித்தேன். எனது மனுவானது முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண். 16691997, நாள் 03.11.2025ன் கீழ் எடுக்கப்பட்டு, தங்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்பு முசிறி நகராட்சி ஆணையர் 04.11.2025ம் தேதியிட்ட பதில் அறிவிப்பை அவரது ந.க.எண். 2450/2025/அ1 மூலம் அனுப்பியுள்ளார். அந்த பதில் அறிவிப்பில் எனது 27.10.2025ம் தேதியிட்ட புகாரில் சொல்லப்பட்டுள்ள முறைகேடுகளான

a) புதிய பேருந்து நிலைய மேற்கூரைக்கு புதிய தட்டு ஓடு மாற்றப்படாமல் அங்கிருந்து களையப்பட்ட பழைய தட்டு ஒடுகளையே பெயிண்ட் அடித்து அதுவே மேற்கூரைக்கு மீண்டும் பதிக்கப்பட்டது. இதனை என்னால் ஒரு பொறியாளர் மூலம் நிரூபிக்க முடியும். இந்த குற்றச்சாட்டிற்கு, 1ம் எதிர்மனுதாரரின் பதில் அறிவிப்பில் எந்த பதிலும் இல்லை.

b) வாரத்திற்கு ஒருமுறை கூட புதிய பேருந்து நிலைய பொதுக்கழிப்பறை தண்ணீர் விட்டு சுத்தம் செய்யப்படுவதில்லை, கொசு மருந்து அடிப்பதில்லை, ப்ளீச்சிங் பவுடர் போடப்படுவதில்லை. இதற்கும் முசிறி நகராட்சி ஆணையரின் பதில் அறிவிப்பில் சரியான பதில் இல்லை.

c) திருச்சி வட்டார போக்குவரத்து அதிகாரியின் ந.க.எண். 8369/அ4/2025 நாள் 29.09.2025–ன்படி புதிய பேருந்து நிலையத்தின் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி ஒரு நாளைக்கு ஒரு பேருந்து நிலைய கட்டணம் ரூ.12/- மட்டும் நகராட்சி வசூல் செய்யலாம். மேற்படி புதுப்பித்தலுக்கு பின்பு பேருந்து கட்டண வசூல் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.1000/-தான் கிடைத்தது. தற்பொழுது நாள் ஒன்றுக்கு பேருந்து கட்டண வருவாய் சுமார் 2000/-க்கு கூடுதலாகும். பேருந்து நிலையத்திற்கு கடந்த 20 ஆண்டுகளாக வந்து செல்லும் பேருந்துகளே இன்று வரை வந்து செல்கின்றன. கடந்த 20 ஆண்டுகளாக பேருந்துகளுக்கு புதிதாக அரசாங்கத்தால் பர்மிட் தரப்படவில்லை. எனவே,

தற்பொழுது 2000/-த்திற்கும் அதிகமாக வசூலாகும்போது அதற்கு முன்பு ரூ.1000/-தான் வசூல் செய்ததாக பேருந்து கட்டணத்தை குறைத்து காட்டி நகராட்சி ஆணையர் சண்முகம் ஆதாயம் அடைந்துள்ளார். இது சம்பந்தமான குற்றச்சாட்டையும் நான் முந்தைய காலங்களுக்கு தங்களது அலுவலகத்தில் உள்ள பேருந்து நிலைய கட்டண ஆவணங்களை நீதிமன்றம் பரிசீலித்தால் இந்த குற்றச்சாட்டை நிரூபிப்பேன். மேலும், பேருந்து நிலையத்திற்கு வெளியில் செல்லும் வாகனங்களில் எதிர்மனுதாரர்கள் வரி வசூல் செய்ய உரிமையில்லை. ஆனால், நகராட்சி ஊழியர் முத்துசெல்வம் மூலம் தொகை வசூல் செய்யப்படுவது சம்பந்தமாக நான் கொடுத்த குற்றச்சாட்டிற்கு பதில் இல்லை.

d) எனது அடுத்த குற்றச்சாட்டான உழவர் சந்தை சாக்கடை கட்டமைப்பு உடைந்துள்ள நிலையில் கடந்த அக்டோபர் மாதம் மழை தண்ணீர் உழவர் சந்தைக்குள் சென்றுள்ளது. உழவர் சந்தைக்கு வடபுறமுள்ள சாக்கடை நகராட்சி சாக்கடையாகும். அதனை எதிர்மனுதாரர்கள் சரிசெய்யாமல் அது பொதுப்பணித் துறையால் சரி செய்யப்பட வேண்டுமென்று பொய்யுரைத்துள்ளார்கள்.

e) 22வது வார்டு புதன்கிழமை வாரச்சந்தையில் உள்ள பொது கழிப்பறை சீர்கெட்டு பழுதடைந்து கிடப்பில் போடப்பட்டுள்ளது. அது என்னால் போட்டோ எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, முசிறி நகராட்சி ஆணையர், அவரது பதிலில் 22வது வார்டு பொதுக்கழிப்பறை பயன்படுத்தும் நிலையில்தான் உள்ளது என வார்டு நகர் மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார் என மேம்போக்காக பதில் அளித்துள்ளார். உண்மையிலேயே எதிர்மனுதாரர்கள் கடமையை சரியாக செய்பவர்களாக இருந்தால் அவர்கள் நேரடியாக ஸ்தலப் பார்வையிட்டு பொதுமக்களை விசாரித்து அதை சரி செய்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் முசிறி நகராட்சி ஆணையர் சண்முகத்துடன் இணைந்து செயல்படக்கூடிய வார்டு உறுப்பினர் கூறியுள்ளதாக முசிறி நகராட்சி ஆணையர் கூறியுள்ள பதில் கண்டிக்கத்தக்கதாகும்.

f) எனது அடுத்த குற்றச்சாட்டான முசிறி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் அந்த பகுதி கழிவு நீர் வாய்க்கால் நகராட்சியால் முறையாக அமைக்கப்படாததால் ஒட்டுமொத்த கழிவு நீரும், வட்டார போக்குவரத்து கழக பகுதியிலும், அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் தேங்கி கொசுக்கள் பரவுகின்றன என்பதாகும். அதற்கும் எதிர்மனுதாரர்கள் பதில் அளிக்கவில்லை.

g) எனது அடுத்த குற்றச்சாட்டான அனைத்து வார்டுகளிலும் சரியான சாலை வசதி, கழிப்பிட வசதி இல்லை என்பது பொறுத்தும், மழைநீர் தேங்காமல் இருக்க வடிநீர் வாய்க்கால் அமைக்கப்படாமல் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு காலரா, வாந்தி, பேதி, காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன என்பதற்கும், மாதத்திற்கு ஒருமுறை கூட கொசு மருந்து அடிப்பதில்லை, பிளீச்சிங் பவுடர் போடுவதில்லை என்பதற்கும் முசிறி நகராட்சி ஆணையரின் பதிலில் எந்த விளக்கமும் இல்லை.

h) எனது அடுத்த குற்றச்சாட்டான தற்போதுள்ள கட்டண கழிப்பறை, குளியலறை பழுதாகி இடிந்து விழும் நிலையில் உள்ளதால், உடனடியாக அதனை இடித்துவிட்டு அல்லது செப்பனிட்டு புதிய கழிவறை, குளியலறை கட்ட வேண்டுமென கூறினேன். பழைய கழிப்பறையில் 10 கட்டண கழிப்பறைகள், 10 கட்டண குளியலறைகள், 3 சிறுநீர் கழிப்பறைகள் உள்ளன. ஆனால், புதிதாக கட்டி 4 மாதங்களாக திறக்கப்படாமல் உள்ள கழிப்பறை கட்டிடத்தில் பாதிக்கு குறைவாகவே அதாவது 8 கழிப்பறைகளும், 2 குளியலறைகளும் மட்டுமே உள்ளது. அதுமட்டுமின்றி, அந்த கழிப்பறை கட்டப்பட்டுள்ள தொகையானது மத்திய அரசால் சந்தப்பாளையம் 1வது வார்டுக்கு கழிப்பறை கட்டிக் கொடுக்க வழங்கப்பட்ட நிதியை மடைமாற்றி புதிய பேருந்து நிலையத்தில் எதிர்மனுதாரர்கள் கழிப்பறை கட்டியுள்ளார்கள். இது சட்ட விரோதமானதும், கண்டிக்கத்தக்கதுமாகும்.

10) எனவே, முசிறி நகராட்சி ஆணையரின் 04.11.2025ம் தேதியிட்ட கடிதத்திற்கு எனது பதிலாகவும், வாக்குமூலமாகவும் 08.01.2026ம் தேதியிட்ட பதில் அனுப்பியுள்ளேன்.

11) எனவே, எதிர்மனுதாரர்களின் செயல் சட்ட விரோதமாகவும், நகராட்சி ஆணையர் சண்முகம் மேலே கண்ட காரணங்களை முன்னிட்டு பல வழிகளில் சுயலாபம் அடைந்துள்ளார். எனவே, இந்த புகார் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, சமூகம் அவர்கள் தயவு செய்து எனது புகாரினை விசாரணை செய்து எனக்கும், பொதுமக்களுக்கும் நல்ல தீர்வு வழங்குமாறு பணிவுடன் பிரார்த்திக்கின்றேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் முசிறி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.158/2026/இ1, நாள் 14.02.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

| புகார் வரிசை எண். | பதில் அறிக்கை |
|---|---|
| 1. | முசிறி புதிய பேருந்து நிலைம் சுத்தமாகவும் மற்றும் சுகாதாரமாகவும் துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் அவர்களால் தினந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 2. | முசிறி நகராட்சி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.146.00 இலட்சத்திற்கு CGF and O&M Deficit Grant Fund 2025-26 திட்டத்தின் கீழ் உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு SR Construction, Attur நிறுவனத்திற்கு 25.06.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்றுவருகிறது. மேற்படி பணிகள் இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ் பணி ஆய்வர், திரு. வீரச்சாமி மற்றும் திரு. ஜெ. சம்பத்குமார், நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் தினசரி கண்காணிக்கப்பட்டு பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. புதிய பேருந்து நிலையம் மேற்கூரையில் உள்ள பழைய தட்டு ஓடுகள் முழுவதும் அகற்றப்பட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு புதிய தட்டு ஓடுகள் ஒப்பந்ததாரர் மூலம் நிறுவனத்திலிருந்து புதிய தட்டு ஓடுகள் கொள்முதல் செய்யப்பட்டு பதிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ள சிறு பகுதிகளுக்கும் நல்ல நிலையில் உள்ள தட்டு ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்ததாரருக்கு பகுதி பட்டியல் வழங்கும்போது பழைய தட்டு ஓடுகளை பதித்ததை கழித்து புதிய தட்டு ஓடுகளை மட்டும் இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ் அவர்களால் அளவு புத்தகத்தில் பதியப்பட்டு அதனை திரு. ஜெ. சம்பத்குமார் நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் பகுதி பட்டியல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார். |
| 3. | முசிறி நகராட்சியில் பேருந்து நிலையத்திற்கு உள் நுழையும் அரசு பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மட்டுமே ரூ.12/- வீதம் நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு முறையாக இரசீது வழங்கப்பட்டு வந்த நிலையில், மேற்படி இவ்வலுவலக ஆய்வாளர் திரு. மு. சரவணன் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், அன்றாடம் வசூலிக்கப்பட்டு வரும் தொகையினை சம்பந்தப்பட்ட எழுத்தர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்ட பின்னரே நகராட்சி வரி வசூல் மையத்தில் மனுதாரர் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாகவே செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள் உண்மைக்கு புறம்பாக தெரிவித்துள்ளார். மேலும், வசூல் பொறுப்பாளரிடம் வருவாய் ஆய்வாளர் திரு. மு. சரவணன் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள் ஏதும் பேருந்து நிலைய வளாகத்திற்குள் வருவதில்லை. அவைகள் உள்ளே வந்தால் மேற்காணும் வாகனங்களுக்கு நகராட்சியால் வசூல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள வசூல் பொறுப்பாளர், வசூல் செய்யப்பட்ட விபரத்தினை தகுந்த ஆதாரத்துடன் அலுவலகத்தில் எழுத்து மூலமாக சமர்ப்பித்தால் மனுதாரர் குறிப்பிட்ட பணியாளர் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தகவலாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார். |

4. முசிறி உழவர் சந்தை ஒட்டி வடபுறம் கீழமேலாக செல்லக்கூடிய சாக்கடை மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் அமையப்பெற்றுள்ளது. மேற்படி, சாக்கடை மாநில நெடுஞ்சாலை துறை மூலம் சீரமைக்கப்பட வேண்டும். இருப்பினும், மேற்படி சாக்கடை நகராட்சி நிர்வாகம் மூலம் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் அவர்கள் நேராய்வு செய்து தினசரி தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

5. புதன்கிழமை வார சந்தை பொதுக் கழிப்பிடம் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மைப் பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது திரு மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

6. முசிறி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் உள்ள பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் எங்கும் தேங்காமல் செல்லும் வகையில் இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு நல்ல நிலையில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

7. முசிறி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் நகராட்சி மூலம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் இருந்து வருகிறது. நகரின் மீதமுள்ள சில பகுதிகளில் மட்டும் அரசு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் சாலைகள் அமைக்கப்படவுள்ளது.

முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 29 எண்ணிக்கையில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி கழிப்பிடங்கள் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மைப் பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

8. தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0)-ன் கீழ், முசிறி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கீழசந்தபாளையம் பகுதியில் கழிப்பறை கட்டும் பணிக்கு இவ்வலுவலக நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் மதிப்பீடு ரூ.19.28 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, நிர்வாகம் அனுமதி பெறப்பட்டது. மேற்படி வார்டு பகுதியில் கழிப்பறை கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை என நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் அவ்வப்போது இருந்த ஆணையர் திருமதி ப. கிருஷ்ணவேணி அவர்களுக்கு பரிந்துரை செய்தும், முசிறி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக் கழிப்பறை கட்டிடம் பழுதடைந்து உள்ளதாலும், பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மேற்படி புதிய கழிப்பிடம் முசிறி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பறை கட்டிடத்தில் தண்ணீர் வசதி அமைக்கப்பட்டு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் கூடுதல் கழிப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (a) முசிறி நகராட்சி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.146.00 இலட்சத்திற்கு CGF and O&M Deficit Grant Fund 2025-26 திட்டத்தின் கீழ் உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு SR Construction, Attur நிறுவனத்திற்கு 25.06.2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ், பணி ஆய்வர், திரு. வீரச்சாமி மற்றும் ஜெ. சம்பத்குமார் நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையின்கீழ் தினசரி கண்காணிக்கப்பட்டு பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. புதிய பேருந்து நிலையம் மேற்கூரையில் உள்ள பழைய தட்டு ஓடுகள் முழுவதும் அகற்றப்பட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு புதிய தட்டு ஓடுகள் ஒப்பந்ததாரர் மூலம் நிறுவனத்திலிருந்து புதிய தட்டு ஓடுகள் கொள்முதல் செய்யப்பட்டு பதிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ள சிறு பகுதிகளுக்கும் நல்ல நிலையில் உள்ள தட்டு ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்ததாரருக்கு பகுதி பட்டியல் வழங்கும் போது பழைய தட்டு ஓடுகள் பதித்ததை கழித்து புதிய தட்டு ஓடுகளை மட்டும் இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ் அவர்களால் அளவு புத்தகத்தில் பதியப்பட்டு அதனை திரு. ஜெ. சம்பத்குமார், நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் பகுதி பட்டியல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (b) தினந்தோறும் புதிய பேருந்து நிலைய பொதுக்கழிப்பறை இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினி பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டு வருகிறது.

9 (c) முசிறி நகராட்சியில் பேருந்து நிலையத்திற்கு உள் நுழையும் அரசு பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மட்டுமே ரூ.12/- வீதம் நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு முறையாக இரசீது வழங்கப்பட்டு வந்த நிலையில் மேற்படி இவ்வலுவலக வருவாய் ஆய்வாளர் திரு. மு. சரவணன் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், அன்றாடம் வசூலிக்கப்பட்டு வரும் தொகையினை சம்பந்தப்பட்ட எழுத்தர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்ட பின்னரே நகராட்சி வரி வசூல் மையத்தில் மனுதாரர் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாகவே செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள் உண்மைக்கு புறம்பாக தெரிவித்துள்ளார். மேலும், வசூல் பொறுப்பாளரிடம் வருவாய் ஆய்வாளர் திரு. மு. சரவணன் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள் ஏதும் பேருந்து நிலைய வளாகத்திற்குள் வருவதில்லை. அவைகள் உள்ளே வந்தால் மேற்காணும் வாகனங்களுக்கு நகராட்சியால் வசூல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள வசூல் பொறுப்பாளர் வசூல் செய்யப்பட்ட விபரத்தினை தகுந்த ஆதாரத்துடன் அலுவலத்தில் எழுத்து மூலமாக சமர்ப்பித்தால் மனுதாரர் குறிப்பிட்ட பணியாளர் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தகவலாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (d) முசிறி உழவர் சந்தை ஒட்டி வடபுறம் கிழமேலாக செல்லக்கூடிய சாக்கடை மாநில நெடுச்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் அமையப்பெற்றுள்ளது. மேற்படி, சாக்கடை மாநில நெடுஞ்சாலை துறை மூலம் சீரமைக்கப்பட வேண்டும். இருப்பினும், மேற்படி சாக்கடை நகராட்சி நிர்வாகம் மூலம் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் அவர்கள் நேராய்வு செய்து தினசரி தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (e) புதன்கிழமை வார சந்தை பொதுக்கழிப்பிடம் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு. செ. பன்னீர்செல்வம் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து, தினந்தோறும் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (f) முசிறி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் உள்ள பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் எங்கும் தேங்காமல் செல்லும் வகையில், இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் திரு. எ. யுவராஜ் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நல்ல நிலையில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், திரு. மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

9 (g) முசிறி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் நகராட்சி மூலம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் இருந்து வருகிறது. நகரின் மீதமுள்ள சில பகுதிகளில் மட்டும் அரசு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் சாலைகள் அமைக்கப்படவுள்ளது.

முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 29 எண்ணிக்கையில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி கழிப்பிடங்கள் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் திரு செ. பன்னீர்செல்வம் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

9 (h) தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0)-ன் கீழ், முசிறி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 கீழசந்தபாளையம் பகுதியில் கழிப்பறை கட்டும் பணிக்கு இவ்வலுவலக நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் மதிப்பீடு ரூ.19.28 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி வார்டு பகுதியில் கழிப்பறை கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை என நகராட்சி பொறியாளர் திரு. ஜெ. சம்பத்குமார் அவர்களால் அவ்வப்போது இருந்த ஆணையர் திருமதி ப. கிருஷ்ணவேணி அவர்களுக்கு பரிந்துரை செய்தும், முசிறி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக் கழிப்பறை கட்டிடம் பழுதடைந்து உள்ளதாலும், பொதுமக்களின் நலன் கருதி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மேற்படி புதிய கழிப்பிடம் முசிறி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, கழிப்பறை கட்டிடத்தில் தண்ணீர் வசதி அமைக்கப்பட்டு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் கூடுதல் கழிப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், திரு மா. பாபுராஜ் அவர்கள் எவ்வித ஆதாரமும் இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பொய்யான புகார்களை தெரிவித்துள்ளார்.

முசிறி புதிய பேருந்து நிலைய கட்டண கழிவறை குத்தகைதாரர் திரு. மா. பாபுராஜ் என்பவரின் புகார் மனுவிற்கு திரு. வே. சண்முகம், ஆணையர் முசிறி நகராட்சி ஆகிய எனது விளக்கத்தினை மேற்காணும் விபரம்படி சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

குத்தகைதாரர் திரு. மா. பாபுராஜ், முசிறி நகராட்சியின் புதிய பேருந்து நிலைய கட்டண கழிவறையினை 2023-2024 ஆம் ஆண்டில் ஏலம் பெற்று, 2024-2025 வரை முறையாக ஏலத்தொகை செலுத்தாததால், முசிறி நகராட்சியின் ஆணையர் என்ற முறையில் மேற்படியார் மீது நகராட்சி விதிகளின்படி நிலுவைத் தொகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாலும், மேற்படியார் ஏலம் எடுத்த கட்டண கழிவறையில் நிர்ணயம் செய்த கட்டணத்தைவிட அதிகமாக வசூல் செய்வதாக தனியர் மீது தொடர்ந்து புகார்கள் வந்ததாலும் திரு. மா. பாபுராஜ் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொண்டதற்கு, மேற்படியார் இவ்வாறான புகார்களை தொடர்ந்து நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வண்ணம் ஆணையர் எனது பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தி ஆதாயம் தேடுவதற்காக செய்யும் செயலாக உள்ளது என தெரியவருகிறது.

திரு. மா. பாபுராஜ் என்பவர் மீது நகராட்சி விதிகளின்படி, துறை நடவடிக்கை மேற்கொள்வதையும், காவல் துறையின் நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதையும் அறிந்த அவர், இவ்வாறான புகார்களை எழுப்பி ஆணையர் ஆன எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்திவருகிறார். மேலும், இதுபோன்று முன் இருந்த ஆணையாளர் திருமதி ப. கிருஷ்ணவேணி, தற்சமயம் மேலூர் நகராட்சி ஆணையர் அவர்களையும் மன உளச்சல் ஏற்படுத்தியுள்ளார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 31.07.2026-ல் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற இருக்கும் இந்நிலையில், முசிறி நகராட்சி ஆணையர் மற்றும் குளித்தலை நகராட்சி ஆணையர் என இரு நகராட்சிகளிலும் பணிபுரிந்து வரும் என்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் ஆகியோரை 17.03.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 17.03.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 158/2026/இ1, நாள் 13.03.2026–ல் சட்டமன்ற தேர்தல் தொடர்பான நன்னடத்தை விதிகள் (MCC) செயல்படுத்திட வேண்டி உள்ளதால், 17.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு முசிறி நகராட்சி மேலாளர் திரு. சு. மாரிமுத்து என்பவரை ஆஜராக அனுமதிக்க வேண்டியதைத் தொடர்ந்து, முசிறி நகராட்சி மேலாளர் திரு. சு. மாரிமுத்து என்பவர் 17.03.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"CGF and Deficit Grand Fund 2025–2026 திட்டத்தின் கீழ் முசிறி நகராட்சி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணி ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதியுடன் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த SR Construction, Attur என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி நகராட்சி மேற்பார்வையாளர், பணி ஆய்வர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் மேற்பார்வையில் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

முசிறி புதிய பேருந்து நிலையம் துப்புரவு ஆய்வாளர் மூலம் ஆய்வு செய்யப்பட்டு துப்புரவு பணியாளர்களைக்கொண்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள புதிய பேருந்து நிலையத்தின் மேற்கூரைகள் புதிய தட்டு ஒடுகள் மூலம் மாற்றப்பட்டு நல்லமுறையில் பணி நடைபெற்று வருகிறது.

முசிறி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்நுழையும் அரசு பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு மட்டுமே ரூ.12/– வீதம் நகராட்சி மூலம் முறையாக வசூலிக்கப்பட்டு, ரசீது வழங்கப்பட்டு, அன்றாடம் வசூலிக்கப்படும் தொகை எழுத்தர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்டு, நகராட்சி வரி வசூல் மையத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. புகார்தாரர் இது தொடர்பாக குறிப்பிட்டு, வசூல் செய்பவர் மீது ஆதார ஆவணங்களுடன் புகார் அளிக்கும்பட்சத்தில் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய பேருந்து நிலையத்தில் போதுமான கழிப்பறைகள் மற்றும் குளியல் அறைகள் அமைக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

முசிறி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் நகராட்சி முலம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும், மனுதாரர் முசிறி நகராட்சியின் மேல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறான புகார்களை அடிக்கடி தெரிவித்து நகராட்சியின் அன்றாட அலுவலல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறார்.

மேற்கண்ட விவரங்களை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.".

7. மனுதாரர் தனது 16.03.2026 நாளிட்ட கடிதத்தில் தனது உடல் உபாதைகளை தெரிவித்து, 17.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையை வேறு தேதிக்கு மாற்றி தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மனுதாரரின் வழக்கறிஞர் இதே தகவலை தெரிவித்து 17.03.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தின் வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் கோரிக்கையை ஏற்று மனுதாரருக்கு மீண்டும் ஒருவாய்ப்பு அளிக்கும் பொருட்டு மனுதாரரை 08.04.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டு, மனுதாரருக்கு முகவரியிடப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அழைப்பானை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

9. மனுதாரர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

10. எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் சார்பில் 17.03.2026 அன்று முசிறி நகராட்சி மேலாளர் விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாலும், மேற்படி அழைப்பானை மனுதாரருக்கு முகவரியிடப்பட்டு, எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டுள்ளதால், 08.04.2026 அன்று விசாணைக்கு எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் ஆஜராகவில்லை.

11. மனுதாரர் தனது 06.04.2026 நாளிட்ட கடிதத்தில் தனது மகனை சட்டக் கல்லூரியில் சேர்க்கும் பொருட்டு 08.04.2026 அன்று பெங்களூரில் இருக்க வேண்டிய நிலை உள்ளதால், 08.04.2026 நடைபெறவுள்ள விசாரணையை வேறு ஒரு தேதிக்கு மாற்றித்தருமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மனுதாரருக்கு இறுதி வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, மனுதாரரை 13.05.2026 அன்று ஆஜராகுமாறு எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டு, மனுதாரருக்கு முகவரியிடப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் 10.04.2026 நாளிட்ட அழைப்பானை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

12. 13.05.2026 அன்று நடைபெறவிருந்த விசாரணை நிர்வாக காரணங்களால் 20.05.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தால் ஒத்திவைக்கப்பட்டு, 20.05.2026 அன்று ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு 21.04.2026 நாளிட்ட அழைப்பானைகள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

13. மனுதாரர் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"முசிறி புதிய பேருந்து நிலையம் பராமரிப்பின்றி சுகாதார சீர்கேடு மற்றும் தொற்று நோய் பரவும் நிலையிலும், இடிந்து விழும் நிலையில் உள்ளது. பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணி ரூ.80.00 லட்சம் செலவு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கூரை அமைக்கும் பணிக்கு புதிய தட்டு ஓடுகள் மாற்றாமல், ஏற்கனவே இருந்த பழைய தட்டு ஓடுகளுக்கு வர்ணம் பூசி, புதியவை போல் காட்டப்பட்டுள்ளது.

புதிய பேருந்து நிலையத்தில், இடிந்து விழும் நிலையில் இருந்த கட்டண கழிப்பறை உடனடியாக செப்பனிட இயலாது என்பதால், மத்திய அரசினால் சந்தப்பாளையம் வார்டு 1–க்கு வழங்கப்பட்ட நிதியை தவறுதலாக பயன்படுத்தி கழிவறைகள், குளியலறைகள் கட்டப்பட்டுள்ளன. எனினும் மேற்படி கழிவறை, குளியலறையில் இன்று வரை திறக்கப்படாமல் உள்ளது.

உழவர் சந்தையில் சாக்கடை நீர் கலப்பதாலும், பொதுக்கழிப்பறைகள் சுத்தம் செய்யாமல் இருப்பதாலும், கழிவு நீர் வழிந்தோடுவதாலும், அனைத்து வார்டுகளிலும் சரியான சாலை, கழிப்பிடம், மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கப்படாததால், ஆங்காங்கே தேங்கி நிற்கும் மழைநீர்/கழிவு நீரால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மேற்கூறிய காரணங்களினால் அனைத்து வார்டுகளிலும் சரியான சாலை வசதி, கழிப்பிட வசதி, வடிகால் வாய்க்கால் போன்ற வசதிகள் இல்லாமல் உள்ளது.

எனவே, மேற்படி அனைத்து பணிகளை சரிசெய்து தருவதற்கு முசிறி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைய விசாரணையில் எனது வழக்கறிஞர் ஆஜராவதாக இருந்தது. சில தவிர்க்க முடியாத காரணங்களினால் அவர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே எனக்கும் எனது வழக்கறிஞருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்து விசாரணைக்கு மறு தேதி வழங்கும்படி மாண்புமிகுமுறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

14. எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 158/2026/இ1, நாள் 18.05.2026–ல் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக பயிற்சி வகுப்பு 19.05.2026 முதல் 21.05.2026 வரை நடைபெறவுள்ளதால், நகராட்சி மேலாளர் திரு. சு. மாரிமுத்து என்பவர் 20.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நகராட்சி மேலாளர் திரு. சு. மாரிமுத்து மற்றும் நகராட்சி பொறியாளர் திரு. சம்பத்குமார் ஆகியோர் 20.05.2026 அன்று ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"முசிறி புதிய பேருந்து நிலையம் துப்புரவு ஆய்வாளர் மூலம் தினமும் ஆய்வு செய்யப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி மேற்பார்வையாளர், பணி ஆய்வர் மற்றும் நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. புதிய பேருந்து நிலைய மேற்கூரை பழைய தட்டு ஓடுகள் முழுவதும் அகற்றப்பட்டு, புதிய தட்டு ஓடுகள் கொள்முதல் செய்யப்பட்டு பதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியதுபோல் பழைய ஓடுகளை வைத்து பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக புதிய ஓடுகள் பதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கழிவறைகள் மற்றும் குளியலறைகளுக்கு மின் இணைப்பு கோரி மின்சார வாரியத்திடம் விண்ணப்பம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

உழவர் சந்தை சாக்கடையில் நீர் கலப்பதினால் ஏற்படும் தொற்று நோய் அபாயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், நகராட்சி சுகாதார ஆய்வாளர் மூலம் நேராய்வு செய்யப்பட்டு தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தினசரி மேற்படி உழவர் சந்தை சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. ".

15. மனுதாரரின் 20.05.2026 நாளிட்ட வாக்குமூலத்தில் தனது வழக்கறிஞர் தவிர்க்க இயலாத காரணத்தால் ஆஜராகாததால், தனக்கும், தனது வழக்கறிஞருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மனுதாரருக்கு இறுதி வாய்ப்பளித்து 16.06.2026 அன்று மனுதாரரை ஆஜராகுமாறு எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையருக்கு நகலிடப்பட்டு, மனுதாரருக்கு முகவரியிடப்பட்ட 21.05.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

16. இந்நிலையில் மனுதாரர் தனது 10.06.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நான் முசிறி புதிய பேருந்து நிலைய மேற்கூரைக்கு தட்டு ஓடு மாற்றியதில் நடைபெற்ற முறைகேடு, ஊழல், முசிறி புதிய பேருந்து நிலையம் மிக மிக மோசமான சுகாதார சீர்கேடு, அதிலுள்ள பழைய கழிப்பிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதை நகராட்சியால் பராமரிக்காதது மற்றும் நகராட்சி அதிகாரத்திற்குட்பட்ட சாக்கடை, கழிப்பிடங்கள், தெருக்கடை சுகாதாரமாக பராமரிக்காதது உள்ளிட்ட பல சங்கதிகள் சம்பந்தமாக மேற்படி புகார் தாக்கல் செய்திருந்தேன். மேற்படி புகாரில் நானும், எதிர்மனுதாரர்களும் ஆஜராவதற்கு சமூகம் அவர்கள் 20.05.2026ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. அந்தப்படிக்கு நான் மேற்படி தேதியில் சமூகம் முறைமன்ற நடுவர் முன்பு ஆஜராகி எனது வாக்குமூலத்தை அளித்தேன்.

2. மேற்படி வாக்குமூலத்தில் எனது 1வது குற்றச்சாட்டான புதிய பேருந்து நிலையம் மேற்கூரை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கூரைக்கு புதிய தட்டு ஓடுகள் மாற்றாமல் ஏற்கெனவே இருந்த தட்டு ஓடுகளுக்கு வர்ணம் பூசி புதியது போல் காட்டப்பட்டுள்ளது என்பதாகும். சமூகம் முன்பு நகராட்சியில் ஆஜராகி மேற்படி மேற்கூரையில் புதியதாக புதிய தட்டு ஓடுகள் மாற்றும் பணி செய்து, அதை சரிசெய்வதாக உறுதியளித்தார்கள்.

3. எனது 2வது குற்றச்சாட்டு மத்திய அரசால் சந்தப்பாளையம் வார்டு 1க்கு வழங்கப்பட்ட நிதியை தவறாக பயன்படுத்தி புதிய பேருந்து நிலையத்தில் புதிதாக குளியலறைகள், கழிவறைகள் நகராட்சியால் கட்டப்பட்டுள்ளது என்பதாகும். அதற்கு நகராட்சியில் தற்போதுள்ள பழைய பொது கழிவறை இடிந்துவிழும் நிலையில் இருந்ததாலும் அதை உடனடியாக செப்பனிட முடியாததாலும், அந்த தொகையை கொண்டு புதிய கழிவறை கட்டிவிட்டதாக தெரிவித்தார்கள்.

4. எனது 3வது குற்றச்சாட்டானது உழவர் சந்தையில் சாக்கடை நீர் கலப்பது, சாக்கடைகள் சுத்தம் செய்யாமல் இருப்பது, கழிவுநீர் வழிந்து வருவதால் அனைத்து வார்டுகளிலும் சரியான சாலை, கழிப்பிட வசதி, மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கப்படாதது என்பதாகும். அதனை தற்பொழுது சரி செய்வதாக நகராட்சியினர் தங்கள் சமூகம் முன்பு உறுதியளித்துள்ளார்கள்.

5. எனவே, நான் மேற்படி அனைத்து பணிகளையும் சரிசெய்வதற்கு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு எனது வாக்குமூலத்தில் பணிந்து கேட்டுக்கொண்டேன். நகராட்சியிலும் சமூகம் முன்பு உறுதியத்ததுபோல் ஏறக்குறைய பணிமேற்கொண்டு முடித்துவிட்டார்கள்.

6. எனவே, எனது புகாரின் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை அவசியமற்றதாகிவிட்டது.

எனவே, சமூகம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் எனது புகாரின் பேரிலான நடவடிக்கைகளை முடித்து வைத்து (closed) உத்தரவு பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் பிரார்த்திக்கின்றேன். ".

17. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலங்கள் மற்றும் கடிதங்கள், எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி சார்பில் ஆஜரான மேலாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

முசிறி நகராட்சி புதிய பேருந்து நிலையம் சுத்தம் இல்லாமல், சுகாதாரமற்று காணப்படுகிறது என்பதும், புதிய பேருந்து நிலையத்தின் மேற்கூரை அமைக்கும் பணியில் ஏற்கெனவே இருந்த தட்டு ஓடுகளுக்கு வர்ணம் பூசி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும், பேருந்து நிலையத்தில் வரி வசூலில் முறைகேடுகள் நடைபெறுகிறது என்பதும், புதிய பேருந்து நிலையத்தில் இடிந்து விழும் நிலையில் இருந்த கட்டண கழிப்பறைகள், குளியலறைகள் புதிதாக கட்ட, சந்தப்பாளையம் வார்டு 1க்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதி தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும், 22வது வார்டு புதன்கிழமை வாரச்சந்தையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பொது கழிப்பறை பயன்படுத்தும் நிலையில் உள்ளது என தவறான தகவலை நகராட்சி அளித்துள்ளது என்பதும், உழவர் சந்தை மற்றும் வட்டார போக்குவரத்து கழக பகுதியில் கழிவுநீர் வழிந்து வருகிறது என்பதும், அனைத்து வார்டுகளிலும் சரியான சாலை, கழிப்பிட வசதி, மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்கப்படவில்லை என்பதும், மேற்படி பணிகளை சரிசெய்வதற்கு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

துப்புரவு ஆய்வாளரால் முசிறி புதிய பேருந்து நிலையம் தினந்தோறும் ஆய்வு செய்யப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதும், CGF and O&M Deficit Grant Fund 2025-26 திட்டத்தின் கீழ் முசிறி நகராட்சி புதிய பேருந்து நிலையம் புதுப்பிக்கும் பணி ரூ.146.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு SR Construction, Attur நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், நகராட்சி பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வர்கள் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் மேற்பார்வையில் பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதும், புதிய பேருந்து நிலையம் மேற்கூரையில் உள்ள பழைய தட்டு ஓடுகள் முழுவதும் அகற்றப்பட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு புதிய தட்டு ஓடுகள் ஒப்பந்ததாரரால் கொள்முதல் செய்யப்பட்டு

பதிக்கப்பட்டுள்ளது என்பதும், மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ள பகுதியில் நல்ல நிலையில் உள்ள பழைய தட்டு ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது என்பதும், பழைய தட்டு ஓடுகள் பதித்ததை கழித்து புதிய தட்டு ஓடுகள் மட்டும் கணக்கிட்டு பணி மேற்பார்வையாளரால் அளவு புத்தகத்தில் பதியப்பட்டு, நகராட்சி பொறியாளரின் மேற்பார்வையில் பட்டியலில் பகுதி தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், பேருந்து நிலையத்தின் உள் நுழையும் அரசு பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு மட்டும் ரூ.12/- வீதம் வரி வசூல் செய்யப்பட்டு, இரசீது வழங்கப்பட்டு வருகிறது என்பதும், வசூல் செய்யப்படும் தொகை நகராட்சி ஆய்வாளர் மூலம் கண்காணிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட எழுத்தர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்டு நகராட்சி வரி வசூல் மையத்தில் செலுத்தப்படுகிறது என்பதும், வேன், லாரிகள், பள்ளி கல்லூரி வாகனங்கள் ஏதும் பேருந்து நிலைய வளாகத்திற்குள் வருவதில்லை, வந்தாலும் அவற்றுக்கு வரி வசூலிப்பதில்லை என்பதும், வரி வசூலிப்பது ஆதாரத்துடன் தெரிவித்தால் நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமுலத்திலிருந்து அறியவருகிறது.

முசிறி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 கீழசந்தபாளையம் பகுதியில் கழிப்பறை கட்டுவதற்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0)-ன் கீழ் ரூ.19.28 இலட்சம் மதிப்பீடு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வார்டு பகுதியில் கழிப்பறை கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை என நகராட்சி பொறியாளரால் பரிந்துரை செய்ததாலும், முசிறி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக் கழிப்பறை கட்டிடம் பழுதடைந்து இருந்ததாலும், பொதுமக்களின் நலன் கருதி, முசிறி பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிய கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி, கழிப்பறை கட்டிடத்தில் தண்ணீர் வசதி அமைக்கப்பட்டு ஏலம் விடவும், கூடுதல் கழிப்பறைகள் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், இப்பொதுக்கழிப்பறை தினந்தோறும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்யப்பட்டு தூய்மை பணியாளர்களை கொண்டு தினந்தோறும் கிருமி நாசினி, பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமுலத்திலிருந்து அறியவருகிறது.

மாநில நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான முசிறி உழவர் சந்தை ஒட்டி வடபுறம் கீழமேலாக செல்லக்கூடிய சாலை, மாநில நெடுஞ்சாலை துறை மூலம் சீரமைக்கப்பட வேண்டும் என்பதும், இருப்பினும், மேற்படி சாலையில் காணப்படும் சாக்கடை நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் நேராய்வு செய்து தினசரி தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதும், புதன்கிழமை வார சந்தை பொதுக் கழிப்பிடம் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மைப் பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதும், முசிறி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் உள்ள பகுதியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் எங்கும் தேங்காமல் செல்லும் வகையில், பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் மதிப்பீடு செய்யப்பட்டு நல்ல நிலையில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், முசிறி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளது என்பதும், நகரின் சில பகுதிகளில் அரசு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் சாலைகள் அமைக்கப்படவுள்ளது என்பதும், முசிறி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 29 கழிப்பிடங்கள் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் ஆகியோரால் நேராய்வு செய்து தினந்தோறும் தூய்மைப் பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமுலத்திலிருந்து அறியவருகிறது.

முசிறி நகராட்சியின் புதிய பேருந்து நிலைய கட்டண கழிவறை மனுதாரரால் 2023-2024 ஆம் ஆண்டில் ஏலம் எடுக்கப்பட்ட நிலையில், 2024-2025 வரை குத்தகைதாரராக மனுதாரர் இருந்துள்ளார் என்பதும், மேற்படி குத்தகைக்கான ஏலத்தொகை செலுத்தாததால், நகராட்சி விதிகளின்படி, நிலுவைத் தொகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், நிர்ணயம் செய்த கழிவறை கட்டணத்தைவிட அதிகமாக கட்டணம் வசூல் செய்வதாக பெறப்பட்ட புகார்களை தொடர்ந்து மனுதாரர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், நகராட்சி விதிகளின்படி, மனுதாரர் மீது துறைவாரியான நடவடிக்கையும், காவல் துறையின் நடவடிக்கையும், மேற்கொள்வதை அறிந்த மனுதாரர்

காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறான புகார்களை அடிக்கடி தெரிவித்து நகராட்சியின் அன்றாட அலுவலக பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறார் என்பதும், மனுதாரரின் இச்செயலால் நகராட்சி ஆணையர்களுக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தி வருகிறார் என்பதும் எதிர்மனுதாரரான முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்,

1) மனுதாரர் கோரியவாறு பலமுறை வாய்ப்பளித்தும், கால அவகாசம் கோரிவந்த நிலையில், **10.06.2026** நாளிட்ட கடிதத்தில் புகார் மனு மீதான நடவடிக்கை அவசியமற்றதாகிவிட்டதால், மனுமீதான நடவடிக்கைகளை முடித்து வைத்து (closed) உத்தரவு பிறப்பிக்குமாறு தெரிவித்துள்ள மனுதாரரின் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

2) இவ்வழக்கு தொடர்பில் கண்டறியபட்டதாவது:-

   a. ரூ.**146.00** இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையத்தின் மேற்கூரை அமைக்கும் பணியில் பழைய தட்டு ஓடுகளுக்கு வர்ணம் பூசி பயன்படுத்தப்பட்டு நிதிமுறைகேடு நிகழ்ந்துள்ளதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

   b. பேருந்து நிலையத்தில் வரி வசூலில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகவும், தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0)-ன் கீழ் ரூ.**19.28** இலட்சம் மதிப்பீட்டில் முசிறி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **11** கீழசந்தபாளையம் பகுதியில் கழிப்பறை கட்டுவதற்கு மாறாக முசிறி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொதுக் கழிப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

   c. மனுதாரர் 2023-2024 ஆம் ஆண்டில் முசிறி நகராட்சியின் புதிய பேருந்து நிலைய கட்டண கழிவறையை குத்தகைக்கு ஏலம் எடுத்த வகையில் மனுதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை நிலுவையாக இருந்து வருவதாக ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

   d. முசிறி உழவர் சந்தை ஒட்டி வடபுறம் கீழமேலாக செல்லக்கூடிய சாலையில் காணப்படும் சாக்கடையின் கட்டமைப்பு உடைந்துள்ளதாகவும், புதன்கிழமை வார சந்தை பொதுக் கழிப்பிடம் பழுதடைந்து இருப்பதாகவும், அனைத்து வார்டுகளிலும் மழைநீர் தேங்காமல் இருக்க மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்படவில்லை எனவும் மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேலே வ.எண். 2 (a), (b) மற்றும் (c) -யில் காணும் இனங்கள் தொடர்பாக நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை மூலம் தணிக்கை செய்யவும், அவ்வறிக்கையின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

மேலே வ. எண். 2 (d)-யில் காணும் புகார்கள் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு பொது இடங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்காதவாறு நகராட்சி பணியாளர்களை கொண்டு அவ்வப்போது கள ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு, அதற்கான அறிக்கையினை மூன்று மாதங்களுக்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பிவைக்க முசிறி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2026-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. மா. பாபுராஜ்,
   த/பெ. மாரியப்பன்,
   47, வடகள்ளர் தெரு, முசிறி,
   முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   முசிறி நகராட்சி,
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal)Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

நகல்–மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.